<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

<u>அ.வ.எண்.127/2023</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழ்செல்வி | தொழில் | |
| தகப்பனார் பெயர் | கோவிந்தராஜ் (லேட்) | வகுப்பு | --- |
| வயது | | சமயம் | |
| நாள் | 13.02.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.1 | | |

இன்று 13.02.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

என் தரப்பு சாட்சிய வாக்குமூலத்தை எழுத்து பூர்வ சாட்சிய வாக்குமூலமாக முதல் தரப்பு சாட்சிய விசாரணை வாக்குமூலம் கடந்த 29.01.2024 ம் தேதியில் தாக்கல் செய்தேன். தற்போது என் தரப்பில் **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 (Ex.A.1 to Ex.A.14)** ஆகிய ஆவணங்கள் என் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ளபடி குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், இறந்த என் தந்தை கோவிந்தராஜீக்கு நானும், 1, 3 வாதிகளும் தான் வாரிசுகள் என அறிவிக்க கோரியும், எங்களுக்கு மேற்படி கோவிந்தராஜீன் வாரிசு சான்றிதழ் வழங்க உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) வாரிசு சான்றிதழ் எதற்காக தேவைப்படுகிறது என்றால், என் தாயாருக்கு ஓய்வூதியம் வாங்க தேவைப்படுகிறது. 3 ம் பிரதிவாதி மணிமேகலை யார் என்றால், அவர் யார் என எனக்கு தெரியாது. அவர் எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்ககூடாது என வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆட்சேபனை செய்துள்ளார். அதனால் அவரை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளோம்.

3) என் தந்தை எங்கு பணியாற்றினார் என்றால், திருப்பூர் மாநகராட்சியில் சந்தை கண்காணிப்பாளராக பணியாற்றி கடந்த 03.01.2016ம் தேதியில் இறந்துவிட்டார். எதனால் அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு குடும்ப ஓய்வூதியம் என் தாயாருக்கு வழங்கப்படவில்லை என்றால், வாரிசு சான்றிதழ் வேண்டும் என்பதாலும், வேறு சில ஆவணங்கள் கோரியிருந்ததாலும், மேற்படி ஓய்வூதியம் வழங்கப்படவில்லை.

4) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில், மேற்படி வாரிசு சான்றிதழையும், உரிய ஆவணங்களையும் உள்ளூர் நிதி தணிக்கை உதவி இயக்குநரிடம் சமர்பிக்க உத்தரவிடப்பட்டிருந்தது என்றால், சரிதான். மேற்படி நீதிபேராணை மனுவில் 3ம் பிரதிவாதி மணிமேகலையை தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால், இல்லை.

5) மேற்படி 3ம் பிரதிவாதி மணிமேகலைக்கும், என் தந்தை கோவிந்தராஜீக்கும் மகேஷ் என்ற மகன் பிறந்ததாக கிராம நிர்வாக அலுவலரின் விசாரணையில் தெரியவந்துள்ளது என்றால், வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆட்சேபனை மனு சமர்பிக்கப்பட்ட போதுதான் எங்களுக்கே தெரியவந்தது.

6) 1, 2 பிரதிவாதிகளிடம் 3ம் பிரதிவாதி ஆட்சேபனை மனு அளிக்கப்பட்டதன் பேரில்தான், வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை என்றால், சரிதான். அரசு அலுவலர்கள் ஆவணங்கள் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் தான் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்றால், சரிதான். நீதிமன்ற உத்தரவு படி 1, 2 பிரதிவாதிகள் செயல்பட தயாராக உள்ளனர் என்றால் சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.